முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2023) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளிடம் கலந்துரையாடி அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் சந்தித்தபோது, புதுதில்லியில் அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மாநாட்டினை சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்தியமைக்காக முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். உடன் வழக்கறிஞர்கள் ரிச்சர்ட்சன் வில்சன், ஜி.தினேஷ் ஆகியோர் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள

மகளிர் ஒப்பனை அறைகள் வாகனத்தை பராமரிப்பது அனைவரின் பொறுப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளத்தில் பதிவு!

சென்னை, அக். 18- பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள மகளிர் ஒப்பனை அறை வாகனத்தை பராமரிப்பது நம் அனைவரின் பொறுப்பு என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "She Toilet" எனும் இந்தப் பாராட்டத்தக்க முன்னெடுப்பைத் தூய்மையாகப் பராமரிப்பது நம் அனைவரது பொறுப்பு!

அதனை உறுதிசெய்யுமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

மகளிர் ஒப்பனை அறை வாகனங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள She - Toilet மகளிர் ஒப்பனை அறை வாகனம் தொடர்பாக, 'பிங்க் கலரில் வந்த தோழி' என்ற தலைப்பிலும், 'மகிழ்ச்சியில் மாநகரப் பெண்கள்' என்ற துணைத் தலைப்பிலும் வெளியான கீழ்க்காணும் கட்டுரையொன்றை இணைத்து தமது பாராட்டை பகிர்ந்துள்ளார்.

இந்தியப் பெண்களின் உரிமைக் குரலான 'திராவிட மாடல்!'

அண்ணா.. ஸ்டாலின் அண்ணா" என்று நெஞ்சம் கொஞ்சும் மழலைத் தமிழிலும், "அக்கா...கனிமொழி அக்கா" என்று இதயம் குளிரும் குழந்தைத் தமிழிலும் இந்திய அரசியலின் முன்னணி பெண் தலைவர்கள் ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக அழைத்த நிகழ்வு சென்னையை மட்டுமல்ல, இந்தியா முழுமையையும் கவனிக்கச் செய்திருக்கிறது.

தி.மு.க. மகளிரணியின் சார்பில் அக்டோபர் 14 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடத்தப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் சோனியா காந்தி அம்மையார் தொடங்கி அத்தனை பெண் தலைவர்களும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ் நாட்டின் அளப்பரிய பங்களிப்பை எடுத்துரைத்தனர்.

கோவி.லெனின்
பத்திரிகையாளர்

ஜம்முகாஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி முதல் கேரளாவை சொந்த மாநிலமாகக் கொண்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா வரை, இந்தியாவின் வடக்கு எல்லை முதல் தெற்கு எல்லை வரையிலான பல மாநிலங்களைச் சேர்ந்த பெண் ஆளுமைகளும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வதை ஒவ்வொரு திட்டத்தின் வாயிலாகவும் எடுத்துக் காட்டினர்.

1989ஆம் ஆண்டிலேயே கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமபங்கு, வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30% இடஒதுக்கீடு, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம் எனப் பலவற்றையும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே, சமாஜ்வாடி கட்சியின் டிம்பிள் யாதவ் எம்.பி, ஆம் ஆத்மி கட்சியின் ராக்கி பிட்லன், திரிணாமூல் காங்கிரசின் சுஷ்மிதா தேவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி எனப் பலரும் எடுத்துரைத்தனர்.

பெண்கள் நலன் காப்பதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னோடித் திட்டங்கள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் வெற்றிகரமாக செயல்பட்டதை கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் நினைவுகூர்ந்தது பெருமித நிகழ்வு. தலைவர் கலைஞரின் வழியில் திராவிட மாடல் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்கள் புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம் என வரிசையாகப் பல திட்டங்களை தந்து, இந்தியாவில் எந்த மாநிலமும் சாதிக்காத கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறை வேற்றியிருப்பதையும் பெருமை பொங்க எடுத்துரைத்தனர்.

திராவிட இயக்கத்தின் முன்னோடி அரசியல் இயக்கமான நீதிக் கட்சியின் ஆட்சியிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதையும் அதன் தொடர்ச்சியாக டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதையும்கூட எடுத்துரைத்தனர். கலைஞரின் பெரியார் நினைவு சமத்துவ புரம் திட்டத்தின்படி, குடும்பத் தலைவியின் பெயரில் வீட்டினைப் பதிவு செய்து கொடுத்து அவர்களை உரிமையாளராக்கியதையும் குறிப்பிட்டனர். அதே வழியில், கழகத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் பதிவு செய்யப்படுவதையும் குறிப்பிட்டு, இது தந்தை பெரியாரின் மண் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தனர்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை தேர்தல் ஆதாயம் கருதி நிறைவேற்றிய பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தையும் தோலுரித்தது மகளிர் உரிமை மாநாடு. ஜனநாயக விரோத பா.ஜ.க அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சிங்கங்களாக கர்ஜனை செய்வதையும், தங்களைப் போன்ற எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் துணை நிற்பதையும் உளப்பூர்வமாக எடுத்துரைத்தனர்.

பிரதமர் மோடி உள்பட பா.ஜ.க.வின் தலைவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு சென்றாலும் தி.மு.க. மீது வெறுப்பை விதைத்து வரும் நிலையில், இந்தியாவில் பாதுகாப்பு மிகுந்த, நல்லிணக்கம் கொண்ட, சமூக நீதிக் கோட்டையாக தி.மு.க. ஆளும் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை இந்தியாவின் பெண் அரசியல் தலைவர்கள் உரக்கச் சொல்லி, டெல்லி வரை கவனத்தை ஈர்த்துள்ளனர்.

மாநாட்டில் நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடலும் திராவிட இயக்கக் கொள்கையும் இந்தியா முழுமைக்கும் தேவைப்படுவதை வலியுறுத்தி, இதே ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெற்று பா.ஜ.க.வை வீழ்த்தும் என உறுதி தெரிவித்ததையும், வடமாநிலத் தொலைக்காட்சிகள் இந்தி உள்ளிட்ட மொழிகளில் சப்டைட்டிலுடன் வெளியிட்டன.

கும்மிடிப்பூண்டிக்கு அந்தப் பக்கம் தி.மு.க.வைத் தெரியுமா என்று கேட்ட கிணற்றுத் தவளைகளின் செவிட்டில் அடித்தாற்போல தி.மு.க.வும் அதன் திராவிட மாடல் ஆட்சிநெறியும் குமரி முதல் இமயம் வரை கொடிக் கட்டிப் பறப்பதை கவிஞர் கனிமொழி எம்.பி. அவர்கள் முன்னெடுத்த மகளிர் உரிமை மாநாடு மெய்ப்பித்துள்ளது. மாநாட்டில் கழகத் தலைவர் அவர்கள் சொன்னது போல, சென்னை சங்கமம் நிகழ்வை சிறப்பாக நடத்தி வரும் கவிஞர் இந்திய சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் உரிமைத் திட்டங்கள் வெறும் வாக்கு அரசியலுக்கானதல்ல, அவை பெண் விடுதலைக்கான சிறகுகள், ஆண்பெண் சமத்துவத்துன் அடையாளம். அதனால்தான் பல மாநிலங்களிலும் வந்திருந்தவர்கள், "ஸ்டாலின் அண்ணா.. கனிமொழி அக்கா" என நெஞ்சம் நிறைந்த சொற்களை வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள்.

இந்தியப் பெண்களின் உரிமைக் குரலாக ஒலிக்கிறது திராவிடக் கொள்கை. அதனை உறுதிப்பட நிறைவேற்றி வருகிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். அனைவருக்கும் அனைத்தும் என்கிற திராவிட மாடல் இனி இந்தியா கூட்டணியின் கொள்கை முழக்கமாகி, இந்தியாவை ஆளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றியவர்கள் உறுதி செய்துள்ளனர்.